தத்துவவிவேசினி

சென்னைலௌகிகசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுவக்கியான பத்திரிகை.

Vol. VI.—No. 11.] MADRAS:—SUNDAY MARCH, 13, 287. A. S. [Monthly, 4 Annas.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

சங்கற்பவாதம்.	சந்தியாவந்தனம்.
இந்துசமயசாரவிளக்கம்.	வர்த்தமானசங்கிரகம்.

சங்கற்பவாதம்.

1. "உலகத்திலெண்ணமிருக்கிறபடியால், எண்ணிச்செய்தவனிருக்கவேண்டும்; அவ்வாறு எண்ணிச்செய்தவன் கடவுள்" என்று கூறுவது சங்கற்பவாதம். சங்கற்பம் என்றால் எண்ணம்.

2. "உலகத்தில் எண்ணமிருக்கிறது" என்பது உத்தேசமென எண்ணாமல் நியாயவாயிலாய் நிலைநாட்டிய உண்மையென நினைக்கிறார்கள். இது இவ்வாதத்திலுள்ள முதல் குற்றம். "உலகத்தில் எண்ணமிருக்கிறது" என்பது உததேசமேயல்லது உண்மையல்லவெனக் காட்டுவோம்.

3. "உலகத்தில் எண்ணமிருக்கிறது" என்று காட்டத்தொடங்குஞ் சங்கற்பவாதிகள், தாங்கள் எடுத்துக்காட்டும் ஒவ்வொரு உதாரணமும் உத்தேச அளவில் நிற்கின்றபடியால் "உலகத்திலெண்ணமிருக்கிற" தென்பது உத்தேச அளவாகவே நின்று பழுதுபடுகின்றது. இதை உதாரணவாயிலாக எடுத்துக் காட்டுவோம்.

4. சங்கற்பவாதிகள்; 'கண்ணை உண்டாக்கியதில்எண்ணமிருக்கிறது. ஏனென்றால், கண்பார்ப்பதை நாம் பிரத்தியட்சமாகப் பார்க்கிறோம். பார்ப்பதற்காகக் கண் உண்டாக்கப்பட்டிருக்கிறது.' என்று கூறுகிறார்கள்.

5. இது தப்பான நியாயம். இதனது போலிநியாயத்தைக்காட்டுவோம்; உடைந்த பாலத்தைக்கண்டு உடைந்ததில் அதன் ஆக்கியோன் எண்ணமிருக்கிறது, ஏனென்றால் இதிலிருந்துவிழுந்து இறப்பதை நாம் பிரத்தியட்சமாய் பார்க்கிறோம். ஜனங்கள் இறப்பதற்காக உடைந்தது. ஆகையால் ஜனங்கள் இறக்கவேண்டுமென்னும் எண்ணத்தை உடைந்த பாலத்திலிருந்து அதன் ஆக்கியோன் சித்தமென நாமறிகிறோமென்று சொல்லுவதை மேற்கூறிய நியாயம் ஒக்கும்.

6. நாம் கண்ணிருக்கிறபடியால் பார்க்கிறோமா? அல்லது, பார்ப்பதற்காகக் கண்ணிருக்கிறதா? காலிருக்கிறபடியால் நடக்கிறோமா? அல்லது, நடக்கிறதற்காகக்காலிருக்கிறதா? இதை, யோசித்துப்பார்த்தால், கண்ணிருக்கிறபடியால் பார்க்கிறோம் காலிருக்கிறபடியால் நடக்கிறோம், எனத்தெளிவாய் விளங்கும். ஆனால் சங்கற்பவாதிகள் பார்ப்பதற்காகக் கண்ணிருக்கிறதென்றும், நடப்பதற்காகக் காலிருக்கிறதென்றும் கூறுவார்கள். அவ்வாறு கூறுதறகு நியாயங் காட்டவேண்டியது அவர்கள் கடனும். அங்ஙனம் செய்யாவிடில அது உத்தேசமே யல்லாது, பிரமாணமன்று.

7. பாலம் உடைந்ததால் ஜனங்களிறந்தார்களா ? அல்லது ஜனங்கள் இறப்பதற்காகப் பாலம் உடைந்ததா? பாலம உடைந்ததால் ஜனங்களிறந்தார்களென்பது நிச்சயம். ஆனால், ஜனங்களிறப்பதற்காகப் பாலம் உடைந்ததெனக்கூறுவது தவறல்லவா? அதுபோலவே, பார்ப்பதற்சாகக் கண்செய்யப்பட்டதென்றும், நடப்பதற்காகக் காலிருக்கிறதென்றும் எவ்வாறு சொல்லக்கூடும்? கண் ணிருப்பதால் பார்க்கின்றோம்; காலிருக்கிறபடியால் நடக்கின்றோம் என்பது நிச்சயமென வெளிப்படும்.

[illegible] நாற்காலியிலே எண்ணமிருக்கிறதே! உட்காருவதற்காக [illegible]ச் செய்கிறார்களே! அதுபோலவே, நமது கண்களும் [illegible]பதற்காகச் செய்யப்பட்டிருக்கவேண்டுமெனச் சங்கற்பவாதிகள் கூறுவார்கள். உட்காரும் பிரயோசனத்தைக் கருதி [illegible]நாற்காலி செய்யப்படுவதை நாம் பிரத்தியட்சமாய் கண்[illegible]பால் உட்காருவதற்காக நாற்காலி செய்யப்பட்டதென [illegible]லக்கூடும். ஆனால், பார்ப்பதற்காகவே கண்ணைச்செய்ய[illegible]ர்த்ததில்லை யாதலாலும், கண்செய்யப்பட்டவஸ்துவல்லவாதலாலும், பார்ப்பதற்காகக் கண் செய்யப்பட்டதென எவ்வாறுகொள்ளக்கூடும்? ஏன், கொள்ளக்கூடாது, என்று சங்கற்பவாதிகள் கூறுவரோயானால், இதுவரையிலும் நாற்காலியைக் காணாத ஓர் சங்கற்பவாதிக்கு நாற்காலியை நாம் காட்டினால், அதில் மேட்டுப்பூச்சியை யிருக்கக்கண்ட அச்சங்கற்பவாதி யாதுகூறுவன? இந்த நாற்காலியினிடத்து எண்ணமிருக்கிறது. மேட்டுப்பூச்சியிருக்க நாம் பிரத்தியட்சமாய்ப் பார்த்திருக்கிறோமாதலால், மேட்டுப்பூச்சி தங்குவதற்காக நாற்காலி செய்யப்பட்டதென இச்சங்கற்பவாதி கூறுவானன்றோ! ஆகையால், மேட்டுப்பூச்சி குடியிருப்பதற்காக நாற்காலி செய்யப்பட்டது எனபது தவறெனதெள்ளிதின் விளங்கும். நாற்காலியிருக்கிறபடியால் மேட்டுப் பூச்சி யிருக்கிறதென்பதே நிச்சயம்.

9. இந்த நியாயத்தால், பார்ப்பதற்காகக் கண் உண்டாக்கப்பட்டதென்பதும்; நடப்பதற்காகக் காலுண்டாக்கப்பட்டதென்பதும் உத்தேச அளவாகவே நின்றதேயல்லாமல், நியாயவாயிலாய் நிலைநாட்டப்படவில்லை. கண்ணிருக்கிறபடியால் நாம் பார்க்கிறோம், காலிருக்கிறபடியால் நடக்கிறோமென்பது தெளிவாய்விளங்கும். இதற்கு திருஷ்டாந்தம், முடவன காலில்லாமையால் நகர்வன்.

10. உலகத்தில் எண்ணமிருக்கிறதென்பது உத்தேச அளவாக நின்றதெனக் காட்டினோம். அதைநியாய வாயிலாய காட்டியதுபோல், ஒப்புக்கொண்டால், சங்கற்பவாதிகளது நிலைமை நியாயபாணத்திற்கு முன்நிற்குமா என்பதை சற்றே பரியாலோசிப்பாம்.

11. கடவுளுக்கு உலகத்தை யுண்டுசெய்யவேண்டுமென்று எண்ணமிருந்தால், இவ்வெண்ணம், அநாதியாக உதித்திருக்கவேண்டும், அல்லது ஓர் காலத்தில் உதித்திருக்கவேண்டும், ஆனால் அநாதியாக உதித்ததென்றால் ஆபாசமாம். ஆதியாக உதித்ததென்றால், அவ்வாறு உதித்ததற்குக் காரணம் யாது? நிர்விகாரியாகிய கடவுளுக்கு விகாரதோஷம்வருகின்றதல்லவா?

12. ஆகையால், எண்ண மிருக்கிறதென ஒப்புக்கொண்டால் அவரது நிர்விகாரகுணத்துடன் முரண்பட்டு ஆபாசமாய்விடுகிறது. கடவுளுக்கு எண்ணம் உதிக்கக்காரணமில்லையென்பதைப் பின் விளக்குவாம்.

13. எண்ணம் என்பது மனக்கிளர்ச்சி. ஆகவே, எண்ணமிருக்கிறது என்னும்போதே, மனக்கிளர்ச்சி யிருந்திருக்கவேண்டும். மனக்கிளர்ச்சியுள்ளபோது, மனக்கிளர்ச்சியை யுண்டுபண்ணின (தனக்கன்னியமாகிய) வஸ்து ஒன்றிருக்கவேண்டும். பிரபஞ்ச சிருஷ்டிக்குமுன்னே, கடவுளைத் தவிர வேறுவஸ்துவில்லையாதலால் அப்போது அவருக்கு எண்ணமுதித்தது என்பது பழுதுடைத்து.

14. மேலும் எண்ணமிருக்கும்போது எண்ணிச்செய்தவனிருக்கவேண்டுமென்பது கடவுள்விஷயத்தில் பொருந்தாது. செய்தல் எனனும் பதத்திற்கு இரண்டுபொருள்களிருக்கின்றன. இவை ஆஸ்திகரை மயக்குகின்றன. (க) முன்னுள்ள பொருளைக்கொண்டு வேற்றுருவு செய்தல் என்பதும் (உ) இல்லாமையிலிருந்து உண்டாக்குதல் அதாவது சிருஷ்டி என்பதும் ஆக இரண்டுபொருள்கள் அச்சொல்லுக்கு இருக்கின்றன. எண்ணமுள்ளபோது எண்ணிச்செய்தவன் இருக்கவேண்டுமென்பதை ஸ்தாபிக்கும்போது, சங்கற்பவாதிகள், வேற்றுருவாக்கல் என்னும் பிரயோகத்தில், "செய்தல" என்னும் பதத்தை யுபயோகிக்கிறார்கள், ஆகையால் எண்ணிச்செய்தவனுக்கு (=எண்ணி சிருஷ்டித்தவனுக்குப்) பொருந்ாது. ஆகையால் இவ்வாதம் கடவுள்விஷயத்தில பழுதுபட்டதைக் கண்டு உணர்வோமாக.

இ-மு.

—o—

இந்துசமயசாரவிளக்கம்.

(விநாயகர் உற்பத்தி.)

ஓர் காலத்தில் பார்வதியார் கங்காநதியில் மஞ்சன நீராடப்போனபோது அவரதுபாங்கிமார் அவருக்குத்

தைலமிட்டு, நலங்குமாதேய்த்து உருட்டிதத்தள்ளின
அழுக்கை ஒருபாங்கிதிரட்டி, முகத்தை யானைமுகம்
போலவும், மற்ற அவயவங்களை மானிட அவயவங்கள்
போலவும் உருப்படுத்திக்கொஞ்சநேரம் வைத்து வி
ளையாடிக் கொண்டிருந்து, பின்னர் கங்கையிலெறிந்து
விட்டனள். உடனே அவ்வுரு உயிர்த்து பிரமாண்ட
மானருபமாகிவர, அதைப்பார்வதி ஏந்தித்தனக்குப்
புத்திரனாக்கிக்கொண்டனள்; தேவர்கள் வந்து தெரி
சித்து, கணங்களுக்கெல்லாம் அதிபதியாகிய 'கணபதி'
எனவாழ்த்தினரென்று, பதினெண்புராணங்களிலொன்
றாகிய மச்சியபுராணம் 153வது அத்தியாயத்தில் சொ
ல்லியிருக்கிறது. இவ்வித அவதாரம் விநாயக புராண
த்தில் கிடையாது.

பதினெண் புராணங்களை முற்காலத்தில் கைலாசப
தியினிடத்திலே பெற்றுக்கொண்ட நந்திதேவர் சனற்
குமாரமுனிவருக்கு உபதேசிக்க, அதை யவரிடத்தில்
வியாசமுனிகேட்டுச் சுலோகங்களாகச் செய்தாரென்
றும், அவற்றைச்சூதமாமுனிவரும் நைமிசாரண்ணிய
ருஷிகளுக்குச் சொன்னாரென்றும் கூறியிருக்கிறது.
விநாயகபுராணத்தை, முற்காலத்தில் பிரமதேவன் அ
நேகதவங்களைச்செய்து, அத்தவ முதிர்ச்சியினால் சிவ
பிரானாலுபதேசிக்கப்பெற்று, வியாசமுனிக்கு உபதே
சித்தான்; அவரிடத்தில் பிருகு முனிகேட்டுச்சுலோக
ங்கள் செய்து ஒருபுராணமாக்கினரென்று விநாயகபு
ராணம் கூறுகின்றது.

இதனாலே, இப்புராணங்களெல்லாம் ஆதியில் கர்ன
பரம்பரையாய்ச் சொல்லப்பட்டுவந்ததினால், வெவ்வே
று திசைகளில் வெவ்வேறு விதமாக மாறிச்சொல்லப்ப
ட்டகதைகள் ஒன்றற்கொன்று விரோதமாயிருக்கிற
தென்று தெரியவருகிறது. அன்றியும், இப்புராண ச
ங்கதிகளில் பிரமனமுதலானதேவர்கள் அடிக்கடி சம்
பந்தப்பட்டே யிருப்பதாலும், அவ்விருத்தாந்தங்கள்
நடந்தகாலத்திலுள்ளவர்கள் அவற்றை அறிந்து சொ
ல்லக்கூடுமாதலாலும், அப்படிப்பட்டதைப் பரமசிவ
னிடத்திற்கேட்க பிரமன் முதலானவர்கள் அரிய தவஞ்
செய்ததை யோசிக்குமிடத்து, புராணவிருத்தாந்தங்க
ள் நடப்பதற்கு முன்னமேதானே நடந்ததாகப் பரம
சிவனார் உபதேசித்தார் போலும்; புராணங்களிலே
சொல்லியிருக்கிற சில சங்கதிகள் ஏதோ ஒவ்வொரு
கற்பத்தில் நடந்ததாகச் சொல்லியிருக்கிறதே யல்லாம
ல், இன்னின்னது இன்னின்ன கற்பத்தில் நடந்ததாகச்
சொல்லக்கூடாமையால், மாறுபடுகிறசங்கதிகளில், அ
து ஒருகற்பத்தில்நடந்தது இது ஒருகற்பத்தில் நடந்த
து என்றுசொல்லவல்லவர் அநேகருண்டு. ஆதலால்,
முந்தியகற்பங்களில் நடந்தவைகளை இந்தக்கற்பத்தின்
முதலில் பரமசிவன் உபதேசித்தான்போலும்.

விநாயகபுராணத்திலே கணபதி அவதாரப்படலத்
தில் சொல்லியிருப்பதாவது:—இளவேனிற்காலம்வந்த
போதுசாம்பசிவமூர்த்திகுளிர்ச்சிவேண்டித் தமது தே
வியாரோடும் உய்யானனத்தை யடைந்து, பலவிருட்ச
ங்கள் மலிந்திருக்கிற அலங்காரங்களைப் பார்த்துக்கொ
ண்டேவந்து அங்கிருந்த ஓர் சித்திரமண்டபத்து ளெ
ழுந்தருளினர். (1) சுவர்களி லெழுதியிருந்த பலசித்
திரங்களோடு ஆணையும் பெண்ணையும் புணர்ச்சி
செய்துகொண்டிருக்கும் பாவனையாக எழுதியிருப்ப
தை உமாதேவிகண்டு, இதென்னவென்றுகேட்க; சிவ
பிரான்-பெண்ணே, யாம் உன்னோடு சம்பந்தமாகி லோ
கங்கட் குபகாரமாய் நடப்பிக்கத்தக்க கருணாரசமாகு
மென்று திருவாய்மலர்ந்து, புணர்ச்சிசெய்திருக்கின்ற
அந்த யானைகளில் ஆணையைத்தாமும் பெண்ணை
யை உமாதேவியும் இன்போடுபார்த்துக் கொண்டிருத்
தலும்(2), அந்தயானைகளுடைய புணர்ச்சி முடிவில்,
பிரணவஸ்வரூபியாயிருக்கிற விநாயகமூர்த்தி உதித்து
சிவனையும் உமையையும் பணிந்தனர். அவ்விருவரும்
தமக்குப் புத்திரனாகப்பிறந்த அக்குழந்தையைத்தழுவி
யெடுத்துக் கொண்டபின்பு, சிவபிரான் அதைக்கணங்க
ளுக்கெல்லாம் நாதனாகக் கணபதியென யாவரும் அ
ழைக்கக்கடவார்களென்று பெயரிட்டு பலவாறு ஆசீர்
வதித்துக் கணபதியை அழைத்துக்கொண்டுபோய் கயி
லாயவாய்தலின் முகப்பிலிருக்கவைத்து, மனைவியோடு
அந்தப் புரத்திற் சென்றனர். விஷ்ணு முதலான
தேவர்கள் வந்து கணபதியைத் துதித்து விடைபெற்
றுக்கொண்டுபோனார்கள் (3.)

அந்தப் புரத்திற் சென்ற சிவபிரானும் உமாதேவி
யும் மகிழ்ச்சிபொங்க சரச சல்லாபத்துடனே அள
வளாவியிருக்கின்றபோது, நாயகன் நாயகியைத் தத்
தம் ஆபரணங்களைப் பந்தயமாகவைத்து சூதாடவழை
த்து, அங்கு சிவதரிசனத்துக்கு வந்திருந்த விஷ்ணுவை
ச்சாட்சியாக வைத்துக்கொண்டு ஆடி, சிவன் தோற்க
வே, அவர் - பரியாசத்தினாலோ மற்ற யாதுகாரணத்தி
னாலோ தான் கெலித்ததாகப் பொய் சொன்னதுமல்
லாமல், தனது புருவத்தை நெரித்துச் சைகைகாட்டி
விட்டுணுவையும் பொய்ச்சாட்சி சொல்லுவித்தார்.
உமாதேவி கோபித்து விஷ்ணுவைக் கண்கெட்டமலை
ப்பாம்பாகித் துன்பமுறக்கடவையென்று சபித்தனள்.
திருமால் நடு நடுங்கி சிவனைப்பிரார்த்திக்க, நீ வடதிசையி
ற்சென்று நமது திருவடிகளைத் தியானஞ்செய்துகொ
ண்டிரு, சில தினத்துள் கஜமுகாசுரனைச் சங்காரஞ்
செய்து அவ்வழியே வருகிற கணபதியை நீ பார்த்த
போது உன் சாபம் நீங்குமென்றனர் (4).

பின்பு தேவர்களுடைய துயரத்தை நீக்க விநாயகர்
பூதகணங்களுடனே எழுந்தருளி, விண்டு முதலிய உயர்
திணைகளினாலும், யானை முதலிய அஃறிணையினாலும்,
அத்திர சத்திரங்கள் முதலிய ஆயுதங்களினாலும் எக்
காலத்தும் அழிவில்லாதிருக்கும்படி பரமசிவனிடத்
தில் வரம்பெற்றிருந்த கஜமுகாசுரனோடு உலக்கை
முதலிய பல வாயுதங்களைப் பிரயோகித்துச் சண்டை
செய்து, கடைசியில் அவன் ஆயுதங்களினாலழியாதபடி
பெற்றிருக்கிற வரத்தை யோசித்து, யானைமுகவிநாய
கர் தனது கொம்பையொடித்துப் பிரயோகிக்கவே,
அது அவனுடைய மார்பைப்பிளந்துபோய் சமுத்தி
ரத்தில் ஸ்நானஞ்செய்து மீட்டும் சுவாமியிடத்தில்
வந்துசேர, அதை அவர் ஒரு ஆயுதமாகத் தனதுகரத்
தில் ஏந்திக்கொண்டனர். கீழே வீழ்ந்த அந்த அசு
ரன் பெருச்சாளி வடிவமெடுத்துவர, அதன்மேல்
அக்கடவுள் ஆரோகணித்தருளி, அப்படுகளத்தில் ஓர்
சிவலிங்கப் பிரதிட்டைசெய்து பூசித்து, வடதிசையினை
நோக்கிச்சென்று விட்டுணுவின் சாபத்தைத் தீர்த்துக்
கயிலாயத்திற்குச்சென்று, தனது யதாஸ்தானமாகிய
முதற்கோபுர வாய்தலின் முகப்பிலெழுந்தருளினர்(5).

---

(1) பல ரிதுக்களின் சுக துக்கங்களை அனுபவிக்குஞ் சிவ
னுக்கும் மனிதருக்கும் என்ன பேதமோ?

(2) இக்காலத்தில் அப்படிப்பட்ட படம் வைத்திருப்பவர்க
ளுக்கு காமாதுரசம்பந்தமான சட்டப்படி சிட்சை கிடைக்கு
மல்லவா? பரம சிவனது திருவருளே பராசத்தியாயிருக்கிற
உமாதேவி அந்தச் சித்திரத்தை யின்னதென்று தெரிந்துகொள்
ளமாட்டாமற் கேட்டது என்ன அஞ்ஞானம்? 'அரவகலல்கு
லார்பாலாசை நீத்தவர்க்கே வீடு, தருவமென் றளவில்வேத
ஞ் சாற்றிய தலைவன்,'' எனத் திருவிளையாடற் புராணத்தில்
சொல்லியிருக்கிறபடி, சிற்றின்பத்தை யொழித்தவர்களுக்கு
மோட்சந் தருவமென்று சொன்ன பரம்பொருளும் அவரது
பத்தினியும் அந்த மிருகப்புணர்ச்சியைப் பார்க்கப் பார்க்க
வெகு ஆனந்தமடைந்தார்களாக்கும்?

(3) எக்காலத்திலெழுதப்பட்டோ விடாப்புணர்ச்சியிலிருந்த
அச்சித்திரங்களை அதுவரையில் அவர்கள் பாராதிருந்ததும், அ
வர்கள் இன்பத்துடனே அதைப் பார்த்துக்கொண்டிருந்த
பின்பு அதற்கு முடிவு நேரிட்டு யானையின் வயிற்றில் அ
களுக்குப் பிள்ளை பிறந்ததும் அதிசயமே.—பிரணவப்பெ
ளாய், பிர்ம விஷ்ணு ருத்திரர்களைப் படைத்தவராய்ச் செ
லப்பட்டிருக்கிற விநாயகர் சமயம் பார்த்திருந்து தமது
ஷ்டிப்பொருள்களுக்குத் தாம் புத்திரனாய்ப் பிறந்ததிரு
அவர்களை வணங்கினார்போலும். சிவனைப்போன்ற வி
முதலிய மற்றைத் தேவர்க ளெல்லோரும் இவரை வ
ணங்கினார்கள்.

(4) யானைகளின் சரச சல்லாபத்தைப் பார்த்திரு
லுண்டாகிய காமநோய் பார்வதி பரமசிவனை விடாது

தாகத் தெரியவருகிறது. இவ்வுலகத்தில் விலக்கப்பட்ட சூது பரமலோகத்தில் ஞான சொரூபிகளால் ஆடப்பட்டது.—இருவரும் மெய்யர்களா யிருந்திருப்பார்களாகில், சூதாடுவதற்கு சாட்சி யொருவன் வேண்டுவதில்லை.—பொய் சொல்லச்சொன்ன சிவன் தானே முதல்வனுதலால் தப்பித்துக்கொண்டான், அவனுடைய பிரேரேபணையின்படி பொய் சொல்லாவிட்டால் ஒருவேளை சபித்துவிடுவானென்று பயந்து பொய்சொன்ன விட்டுணுவுக்குக் கிடைத்த லாபம் மிகுதியே; விநாயகரால் சிவனைப்போலவே சிருட்டிக்கப்பட்ட விட்டுணு சிவனுக்கு ஏன் அடங்கி யிருத்தல் வேண்டுமோ தெரியவில்லை. இப்படிப்பட்ட கதையை வைஷ்ணவர்கள் ஒப்புக்கொள்வார்களாகில், சரியென்னலாம். சூதாடல், காமம் முதலிய துர்க்குணங்க ளமைந்திருந்த பாரசக்தியினுடைய சாபம் பலித்தது அவளுடைய கற்பு நிலைமையினு லாக்கும். தான் கெலித்ததாகப் பரியாசத்தினுலோ சிவன் பொய் சொன்னுனென்று புராணிகர் சொன்னபடி சிவனுடைய விளையாட்டு விஷ்ணுவுக்கு வினையாக முடிந்தது; தன்னை யடுத்திருந்து தன்னுடைய ஏவலின்படி பொய் சொன்ன விஷ்ணுவுக்குப் பரிகாசத்தினுல் விளைந்த தீவினைக்கு உடனே பரிகாரஞ்செய்யச் சக்தியில்லாமல், சில நாள் சென்றுவது விநாயகர் தரிசனத்தால் அச்சாப வினை தீருமென்றதும் சிவனுடைய பேரருளே.

(5) நினைத்தமாத்திரத்தில்அழிக்கத்தக்க சர்வவல்லமையுடைய பிர்மசொரூபியாகிய விநாயகர் சண்டைசெய்தற்குப் பூசசணங்களின் சகாயம் வேண்டியிருந்தது.—அவ்வரக்கன் உயர்திணையினுலும் அஃறிணையினுலும் அழியா வரம்பெற்றதனுல், அவனை வதைக்க மனித உடலும் யானைமுகமுமுடைய விநாயகர் தோன்றினர்; இவர் மக்களுக்கும் மிருகங்களுக்கும் பொதுவாகிய பொதுத்திணையாக்கும்; மானிடவுடலோடும் யானை முகத்தோடும் பொதுத்திணையாகத் தானிருக்கிறதை அறிந்திருக்கிற அக் கஜமுகாசுரன் தன்னைப்போன்ற பொதுத்திணையால் அழியாவரங் கேளாது விட்டது அவனுடைய மதிமோசமோ, அல்லது கதை கற்பித்தவன் முன்னும் பின்னும் ஆலோசித்துக் கதைக்கேற்க எழுதியமதிநுட்பமோ!—உலக்கை - தடி - மூங்கிற்கோல் முதலியவை ஆயுதமாயிருக்க, யானைக்கொம்பு பிரயோகிககப்பட்டபோது ஆயுதமாகாமல், அதுவதை யுண்டுபண்ணின பின்பு ஆயுதந்தானென்று கணபதிதெரிந்தெடுத்துக்கொண்டது அவருடைய புத்திவிசாலமே.—ஒடிந்த கொம்பு சமுத்திர ஸ்நானஞ்செய்து திரும்பிவந்து சேர்ந்தது அற்புதமே.—பற்பல ஆயுதங்களினுல் பலவாறுன சண்டைசெய்தபின், அவ்வசுரன் ஆயுதத்தா லழியாவரம் பெற்றிருந்ததை நினைத்து கடவுள் கொம்பை யொடித்துக்கொண்டு சண்டைசெய்தது முற்று முணருந்தன்மையே.—இவ்விதமாய்ப்பரமசிவனருளிய வரம்பாழானது அவருக்குப் பெருமையே; பிரமாதம் விளையுமென வறியாது வரந்தந்ததும் அவருடைய நெற்றிக்கண் ஞானமே. விநாயகர் பிரமசொரூபியாயிருந்துகொண்டு சிவன் முதலிய திரிமூர்த்திகளைச் சிருஷ்டிசெய்திருக்க, அவர் கஜமுகாசுரனைக்கொன்ற படுகளத்திலே சிவலிங்கப் பிரதிஷ்டை செய்தது தான் செய்த கொலைபாதகந்திரவாக்கும்? சிவன் முதலிய தேவர்களுக்குத் தனித்தனி பதவிஸ்தலங்களிருப்பதுபோல விநாயகருக்குத் தனக்கென ஒன்றுமில்லாமையால், அவரை நம்பினவர்கள் அவரைப்போல வாயிற்படியண்டைதான் விழுந்து கிடக்கவேண்டும். என்ன ஆபாசம்!

சந்தியாவந்தனம்.

(39-வது பக்கத்தொடர்ச்சி.)

ஓமித்யேகாக்ஷர பிரம்மமென்னும் காயத்திரி ஹ்ருதயம்.

ఓమిత్యేకాక్షరంబ్రహ్మ, అగ్నిర్దేవతా, బ్రహ్మఇత్యార్షం, గాయత్రంఛన్దం, పరమాత్మంస్వరూపం, సాయజ్యం వినియోగం.

ஓமித்தியேகாக்ஷரம் பிரம்ம, அக்னிர்தேவதா ப்ரஹ்ம இத்தியார்ஷம், காயத்ரம் சந்தம், பரமாத்மம் ஸரூபம், ஸாயஜ்யம் வினியோகம்.

இதன் உரை.—பிரணவத்திற்கு தேவதை அக்கினி, அக்கினி எனின் பரமாத்மா, அப்பிரணவத்திற்கு இருஷி பிர்ம்மா, இருஷி எனின் பிரணவம் குறிக்கும் தேவதை. அப்பிரணவத்திற்குச் சந்தசு காயத்திரி, சந்தசு எனின் அக்ஷரப் பிரமாணம், அப் பிரணவம் பரமாத்மா சொரூபம். அதன் பிரயோகம் மோக்ஷத்தைப்பற்றியது.

விசேஷ உரை.—பிரணவமானது ருக் - எஜுர் - சாமவேகளினின்று கிரமமாய் அகர உகர மகரங்கள் உதித்துறு சேர்ந்து ஓம் என்றுயிற்று. இம்மூன்று அக்ஷரங்கூடிபிரணவத்தில் முதலெழுத்தான அகரம் விஷ்ணுவையும், கடையெழுத்தானமகரம் ஜீவனையும், மத்திய வெழுத்தான உகரம் பரமாத்துமாவுக்கும ஜீவாத்துமாவுக்கும் உள்ள நித்திய ஐக்கியத்தையும் பற்றிச்சொல்லுகின்றது. அகரத்தில் சிருஷ்டி திதி சங்காரமென்னும் முக்கிரியைகளும் அடங்கியிருக்கின்றன.

கருத்து.—அகரத்தினுல் சொல்லப்பட்டிருக்கிற பரமாத்துமாவுக்கு மகரத்தினுல்சொல்லப்பட்டிருக்கிற சீவன் சேஷபூதன். அத்வைதிகள் ஜீவாத்துமாவுக்கும் பரமாத்துமாவுக்கும் உள்ள ஐக்கியத்தை சொல்லுவார்கள். சிலர் உகரத்தை இலட்சுமிக்கு உரியதென்பார்கள்.

ஆயாது வரதாதேவீ எனும் காயத்திரியாஹ்வானம்.

౧. ఆయాతువరదాదేవీఅక్షరంబ్రహ్మసమ్మితం, గాయత్రీంఛన్దసాంమాతేదంబ్రహ్మజుషస్వమే.

౨. యదహ్నాత్కురుతేపాపంతదహ్నాత్ప్రతిముచ్యతే, యద్రాత్ర్యాత్కురుతేపాపం తద్రాత్ర్యాత్ప్రతిముచ్యతే, సర్వవర్ణేమహాదేవిసన్ధ్యావిద్యేసరస్వతి.

3. ఓజోసి సహోసి బలమసి, భ్రాజోసి, దేవానాం ధామనామాసి విశ్వమసి విశ్వాయుః సర్వమసి సర్వాయురభిభూరోమ్ గాయత్రీమావాహయామి.

౪. సావిత్రీ మావాహయామి, సరస్వతీమావాహయామి, ఛన్దఋషీ నావాహయామి, శ్రియ మావాహయామి.

1. ஆயாது வரதாதேவீ அக்ஷரம் பிரம்மஸம்மிதம் காயத்ரீம் ச்சந்தஸாம் மாதேதம் பிரமஜுஷஸ்வமே.

2. யதஃனுத் குருதேபாபம் ததஃனுத் ப்ரதிமுச்யதே, யத்ராத்ரியாத் குருதேபாபம் தத்ராத்ர்யாத் ப்ரதிமுச்யதே, ஸர்வவர்ணே மஹாதேவி ஸந்தியாவித்யே ஸரஸ்வதி.

3. ஓஜோஸி ஸஹோஸி பலமஸி, ப்ராஜோஸி, தேவானும் தாமனுமாஸி விஸ்வமஸி விஸ்வாயுஹு ஸர்வமஸி ஸர்வாயுரபிபூரோம் காயத்ரீமாவாஹயாமி.

4. ஸாவித்ரீமாவாஹயாமி, ஸரஸ்வதீமாவாஹயாமி, ச்சந்தருஷீனுவாஹயாமி, ஸ்ரியமாவாஹயாமி.

இம்மந்திரத்தினுல் காயத்திரி பிரார்த்திககப்படும்.

கருத்து.—1. வரத்தைக்கொடுத்து சதா ஆனந்திக்கிற தாயான காயத்திரி என்னிடத்திற்கு வரக்கடவது. அழிவில்லாததும், சத்தியமானதுமான வேதாந்த பிரமாணத்தினுல் யேற்படுத்தப்பட்ட பரமாத்மா அல்லது வேதத்திற்கு சமானமுமானது பிரம்மம். பிரணவம் எனின் பிரணவத்தைப்போல் சர்வார்த்த சங்கரஹம்காயத்திரி யல்லவா. மற்றொருவிதம் வரத்தைக்கொடுக்கும் தாயான காயத்திரி சத்தியத்தையும் வேதாந்த பிரமாண நிச்சயமான பரமாத்தும தத்துவத்தையும் போதிக்க வரக்கடவது. படிப்பின் ஆரம்பத்திற்குத் தாயான காயத்திரி நான் செய்யும் இந்த பிரம்ம தவத்தை அல்லது இந்த பரதத்துவத்தை உபதேசிக்கக்கடவது. அல்லது அனுக்கிரகிக்கக்கடவது.

2. சமஸ்த நிறங்களுடைய மஹாதேவி பகலில் செய்த பாவத்தைப் பகலிலும், இராத்திரியில் செய்த பாவத்தை இராத்திரியிலும் இந்த உபாசகனுக்கு நீக்கிவிடும்.

3. இந்திரியங்களுடைய வலிவானுய். பகையாளியை வெல்லும் சக்தி அல்லது துரிதமுள்ளவருடைய துரிதமானுய். தேகவலிவு ரூபமானுய். தேஜசை உடையவள் இந்திராதிதேவர்களுக்கு தேஜசு எதுவோ அந்த நாமத்தை அடைந்திருக்கிறுய். அல்லது, தேவர்களுக்கு பிரசித்த ஸ்தானமானுய். சமஸ்தமும் நீயே. பூர்ணுயுசு சொரூபமுள்ளவளும் நீயே. அசரங்களாகவும், அவற்றின் சத்தாகாலமாகவும், இயங்குந் திணைப்பொருள்களாகவும், அவற்றின் ஆயுளாகவும் இருந்து எல்லா இடர்களையும் விலக்குங்காரணம் நீயே, ஓம் பிரணவத்தினுல் பிரதிபாத்தியமான பரமாத்மா நீயே. இப்பேர்க்கொத்த காயத்ரியை நான் ஜபிக்கிறேன்.

4. காலபேதத்தினுல் நாமபேதங்களால் கூப்பிடுகிறதுதகுதி. ஆகையால், உதயத்தில் காயத்ரி என்றும், மத்தியானத்தில் சாவித்திரி என்றும், சாயங்காலத்தில் சரஸ்வதி என்றுங் கூப்பிடப்படும். சுத்தமுள்ள மனதுடன் துதிப்பவனை காப்பாற்றுவது காயத்ரி. சூரியமண்டல மத்திவனாயில் வியாபித்திருப்பது சாவித்ரி. ஜகத்திற்கு தாயாக இருப்பதினுல்சரஸ்வதி எனப்படும். தேஜோமயத்துவம், ஜகத்சிருட்டித்துவம், இரக்ஷகத்துவம், பரமாத்மாவினிடத்தில் காணப்படுவதினுல், காயத்திரி என்றுசொல்லப்பட்டதேவதை பரமாத்துமா என்று அறிக. காயத்ரிமுதலிய சந்தசுகளையும் விஸ்வாமித்திரர்முதலிய இருஷிகளையும் இலட்சுமியையும் கூப்பிடுகிறேன்.

காயத்திரியின் ச்சந்தருஷியாதிகம்.

గాయత్ర్యా గాయత్రీఛన్దో విశ్వామిత్ర ఋషిస్సవితా దేవతాగ్నిర్ముఖం బ్రహ్మశిరోవిష్ణుర్హృదయగ్ం రుద్రశ్శిఖాపృథివీయోనిః ప్రాణాపానవ్యానోదాన సమానా సప్రాణా, శ్వేతవర్ణా సాఙ్ఖ్యాయన సగోత్రా గాయత్రీ చతుర్విగ్ంశత్యక్షరా త్రిపదా షట్కుక్షిః పఞ్చశీర్షోపనయనే వినియోగః

காயத்திரியா காயத்ரீச்சந்தோ விஸ்வாமித்ரருஷிஸ் ஸவிதாதேவதாக்னிர்முகம் பிரஹமாசிரோ விஷ்ணுர் ஹ்ருதயச் ருத்ரஸ்ஷிகா ப்ருத்வீயோனி: ப்ராணுபான வ்யானுதான ஸமானுஸப்ராணு, ஸ்வேதவர்ணு ஸாங்கியாயன ஸகோத்ரா காயத்ரீ சதுர்விக் ஸத்தியக்ஷரா த்ரிபதா ஷட்குக்ஷி: பஞ்சசிர்ஷோபநயனே வினியோகஹ.

கருத்து.—காயத்ரி மந்திரத்தின் சந்தசு காயத்ரி. இருஷிவிஸ்வாமித்திரர். தேவதை சூரியன். முகம் அக்கினி. சிரசு பிரம்மா. இருதயம் விஷ்ணு. குடுமி ருத்திரன். யோனி பூமி. தேவதத்தம் கூர்மம். தநஞ்செயம் நாக க்ருகரஙகளும் உபபிராணங்களுடன் கூடிய பிராணுதி பஞ்சகங்களை உடையது. அது வெண்ணிறமுடையது; எப்படி எனின், காயத்ரி செந்நிறமும், சாவித்ரி வெண்ணிறமும், சரஸ்வதி கருநிறமுமென அறிந்துகொள்க. சாங்கியான இருஷிக்கு சகோத்ரா. இத்தன்மையான காயத்ரி உச-எழுத்துடையது. ருக் யஜுர் சாமவேதரூபங்களான மூன்று பாதங்களையும், நான்கு திக்குகளும்கீழ்மேல் உ-ம் ஆக கூ-ம் வயிராகவும், இலக்கணம் சிட்சை கல்ப்பம் நிருக்தம் சோதிடம் என்ற-ரு-சிரசுகளையும் உடையது. இதன் உபயோகம் உபநயனத்தில்தான்.

வேதங்கள் ஒருகாலத்தில் உண்டானதல்லவென்றும், அநாதியென்றும் பிராமணர் கூறுகின்றனர். சந்தியாவந்தனம் ருக் யஜுர் சாமவேதங்களின் தொகுதி. பூர்வகாலத்தில் தங்கள் பாவங்களைப் போக்கடித்து மோக்ஷமடைய கடவுளை நோக்கி தவஞ்செய்த சாங்கியாயன இருஷி விஸ்வாமித்திர இருஷி முதலியவர்களின் நாமங்கள் வேதங்களின் சங்கிரகமான சந்தியாவந்தனத்தில் வருவதால், சந்தியாவந்தனம் அவர்களால் எழுதப்பட்டதென்றும் அநாதியல்லவென்றும் தெளிவாகக் காணப்படுகின்றது.

(இன்னும்வரும்.)

M, M.

வர்த்தமானசங்கிரகம்.

வங்காளத்திலே ஜனங்களுடைய சுகத்தை விர்த்தி செய்வதற்கான முயற்சி செய்யத்தக்க "பிரஜாரோக்கிய சங்கம்" என்பதொன்று ஏற்பட்டிருக்கிறது. இனி அதனுல் வெகு நன்மையுண்டாகலாம்.

பஞ்சாபிலே மழையில்லாமையால் பயிர்விஷயத்தில் வெகுகவலையுண்டாயிருக்கிறது. அந்த நாடுமுழுவதும் மழை மூறைப்பாடு பெரிது. அநேகவிடங்களில் இளம்பயிர் சாவியாய்ப்போகிறது. நாடுமுழுவதும் அகவிலை ஏறிக்கொண்டு வருகிறது.

கண்டோன்மெண்டுக்கு நாலுமயல்தூரத்திலே குவாலியர் ரோட்டில் நாளதுமீ 3உ பெருங்கொள்ளை யடிக்கப்பட்டது. இருபத்திரண்டு வண்டிகளைக் கொள்ளையடித்து மூவாயிரம் ரூபாய் சொத்து அடித்துக்கொண்டு போய்விட்டார்கள். வெடியாயுதங்கள் வைத்துக்கொண்டு குதிரை யேறிவந்த கொள்ளைக்காரர்கள் நூறுபேருக்கு அதிகமாகவேயிருக்கும்.

நாகப்பட்டணத்துக்கு சிலமயல்தூரத்திலிருக்கிற நாகூரில் சிறப்புற்ற மீராசாயபு மச்கான்மசூதியிலே இப்போது மகமதியர்களால் இவ்வருஷபண்டிகை கொண்டாடப்படுகிறது. இந்தியாவில் பலபாகங்களிலிருந்து மகமதிய யாத்திரிகள் இந்த மசூதிக்கு வருகிறுர்கள். இதற்கு வரும்படி சுமார் 70,000 ரூபாய்.

ஜூபிலி கொண்டாட்டத்தினிமித்தம் போர்ட்டுபிளேயரில் விடுதலை செய்யப்பட்ட குற்றவாளிகளுள் அனேகர் ஹைதராபாத்தார்; அவர்கள் கும்புகூடி கொள்ளையடித்ததற்காகக் கிட்டத்தட்ட ஐம்பது வருஷத்துக்குமுன்னே ஆயுசுவரையில் சிறைச்சாலை சிட்சையடைந்தவர்கள்.

பரோடாவின் கிவிக்வாரவர்கள் இப்போது சரீராரோக்கியத்துக்காக சிலோனிலே நூராலியாவில் நின்றிருக்கிறுர். காண்டியில் நிறைவேறிய நாடகத்திலே அவர் தரித்திருந்த வைரங்கள் மிகுந்த கவனத்தை கிரகித்ததென்று கொழம்பு பத்திரிகையில் கண்டிருக்கிறது.

அறிக்கை.

நமது மெம்பர்களும் கையொப்பநேசர்களும் தாங்கள்பெறுகிற ஒருபிரதிக் கதிசமாக "தின்கர்" என்னும் இங்கிலீஷ் பிரதியாவது, "தத்துவவிவேசினி" என்னுந் தமிழ்ப்பிரதியாவது பெறவிரும்பினுல், அடியிற்கண்டிருக்கிற குறைந்தவீதத்திற்குப பெற்றுக்கொள்ளலாம்.

மாசமொன்றுக்கு அதிகமாகவாங்குகிற

இங்கிலீஷ் பிரதி - க - ற்கு .. அணு ச

தமிழ்ப்பிரதி ... - க - ற்கு ... அணு உ

இங்கிலீஷ் பிரதியாயின் இரண்டும் தமிழ் பிரதியாயின் நான்கும் ஒரேதபாற்செலவில் அனுப்பக்கூடும்.

இவ்விதமாய்ப் பத்திரிகையைப் பரவச்செய்து, இரட்டைப்பேற்றுச்சகோதரர்களாகிய—மடமை, மூடபக்தி----என்னும் இராக்கதர்களோடு போராடி வெற்றி பெறுவதற்கு நமது மெம்பர்களும் நண்பர்களும் துணை புரிவார்களென்று நம்புகிறோம்.

இந்தியாவிலுள்ள

சுவக்கியானிகளை

மதிராஸ் சிக்கியுலர்சோசைட்டியில்

மெம்பர்களாகச் சேரும்படி

கேட்டுக்கொள்ளலாகின்றது.

கையொப்பநேயருக்கு

யாதொரு பத்திரிகை வந்து சேரப்பெறுதவர்கள் உடனேதெரிவிக்கவேண்டும்; காலாதீதமாய்த் தெரிவித்தால் அப்பத்திரிகை பின்புகிடைப்பதரிது.

உள்ளூர்மெம்பர் - மூன்றுமாசத்திற்கு—ரூ 3— 0—0

வெளி ,, ,, —ரூ 1—14—0

செலுத்தவேண்டும். அப்படி சேருகிறவருக்கு "தின்கர்" என்னும் இங்கிலீஷ் பத்திரிகையாவது, "தத்துவவிவேசினி" யாவது இலவசமாக அனுப்பப்படும்.

தத்துவவிவேசினி

நான்குபக்கம், பிரதி 1க்கு விலை அணு 1.

தமிழ்சந்தாவிபரம்.

		Rs.	A.	P.
மாசம்	1-க்கு	0	4	0
ஷை	3-க்கு	0	10	0
ஷை	6-க்கு	1	2	0

முன்பணஞ் செலுத்தவேண்டும். சந்தாவோடுகூட, இந்தியாவிலும் பர்மாவிலு முள்ள வெளியூரார் மாசமொன்றுக்கு ஒருஅணுவீதமும், சிலோனிலுள்ளவர்கள் வாரமொன்றுக்கு ஒரு அணு வீதம் ஆறுமாசத்திற்கு ரூ 1—10—0 மும் தபாற்செலவு சேர்த்தனுப்பவேண்டும். ஒரு வருஷத்திற்குப் பணமனுப்ப விரும்புகிறவர்கள் ஆறுமாசத் தொகைக்கு இரட்டிப்பு அனுப்பவேண்டும். தபாற்செலவு குறைவுபடக் கோருகிறவர்கள் தெரிவித்தால், பத்திரிகைகள் இரண்டுவாரத்திற்கொருவிசை சேர்த்தனுப்பப்படும் பட்சத்தில், பாதியும், நான்குவாரத்துக்கொருவிசை சேர்த்தனுப்பப்படும்பட்சத்தில் முக்கால்பங்கும் தபாற்செலவு கூடிவரும்.

பத்திரிகைக்கு எழுதும்கடிதமுதலியவிஷயஙகளை

மாத்திரம்

சென்னை முத்தியாலுப்பேட்டை இலிங்கசெட்டிவீதி

307 - வது நம்பர் வீட்டில்

பு. முனிசுவாமிநாயகருக்கும் ;

1886ம் - வருஷ முதல் சந்தாக்களையும்,

இங்கிலீஷ் பத்திரிகைகளையும்,

வேப்பேரி சில்வர்ஸ் ரோட்டில்

மதிருஸ் செகுலர்சொசைட்டி ஆனரெரிசெக்ரிட்டேரி

மெஸ்டர். அப்ஷன்துரை யவர்களுக்கும்

அனுப்புதல்வேண்டும்.

Printed and Published for the Proprietor at the VURTHAMANATHARUNGINI PRESS, No. 174, Davaraja Moodelly Street,—Madras.